

tamilmagazines.blogspot.com

மினி தொடர்

# ஈரம்





பிரபஞ்சன்

சந்தியாவுக்கு அது புரியத் தான் இல்லை. எல்லா வீட்டு ஜன்னல்களும் தானே திறந்து கொண்டு அவளையே பார்ப்பது போல இருந்தது. பெண்கள் அவளைப் பார்க்காமலே பார்த்தார்கள். ஆண்கள், கூலிங்கிளாஸ் வழியாக அவளைப் பார்ப்பதாக அவள் உணர்ந்தாள்.

*காலை வேளைகளில் பால் பாக்கெட் போடும் அந்த ஒல்லியான பெண்மணி, பேப்பர் போடுகிற பையன், காய்கறிகளோடு ஊர் விஷயங்களையும் சேர்த்து விற்கும் கடைக்காரர், என்று அவளைச் சுற்றி*

tamilmagazines.blogspot.com



1

tamilmagazines.blogspot.com



இயங்கும் மனிதர்கள் பலருக்கும் அதைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் என்கிற ஆவல் இருப்பதாக அவளுக்குத் தோன்றியது.

சந்தியாவுக்கு ஒரு தோழி. அவள், பிலோமினா. அவள், சாப்பிடும் முன்பு கை கழுவப் போகும் இடத்தில் வைத்துக் கேட்டாள்.

"என்னப்பா, உனக்கும் எம்.கே. மூர்த்திக்கும் ஏதோ இருப்பதாக எல்லோரும் சொல்கிறார்களே.. உண்மைதானா..?"

"எல்லோரும்னா யார், யார்? மன்மோகன் சிங்கும், சோனியாவுமா? அழகிரியும் ஸ்டாலினுமா, அல்லது அஞ்சலியும் அமலாவுமா?" இருவரும் சேர்ந்து சிரித்தார்கள்.

"சாரி. நான் கேட்டிருக்கக் கூடாது. வரம்பு மீறல்."

"நோ. நாட் அட்டால். உனக்கு உரிமை இருக்கப்பா. ஆனா, அது உரையாடத்தக்க விஷயம் அல்ல. உள்ளே என்ன இருக்குன்னு தெரிஞ்சுக்க முடியாத இருட்டுக் குகை. வெளியிலேந்து பார்த்தா எனக்குள்ளே என்ன இருக்குன்னு யாருக்குத் தெரியும். ஏன் என்னையே சொல்றேன். நானும் அவனும் தான் உள்ளே இருக்கோம்னே வச்சுக்க. எங்களுக்கே தெரியலை, எங்கே இருக்கோம்னு. உள்ளே என்னதான் இருக்குன்னு... இருட்டுதான் தெரியுது. ஒருக்கால், இருட்டுதான் அதுவோ, அதுக்கு இன்னொரு பெயர் இருட்டோ, என்னவோ..."

பிலோமினா, இவள் முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தாள். அவளை அப்படியே இருக்கவிட்டு, சந்தியா தன் அறைக்குப் புறப்பட்டாள். அறை இருக்கும் பெண்கள் விடுதி, தூரத்தில் இல்லை. நடப்பது சௌகர்யமாக இருந்தது. நடக்கும் போது மனசை கட்டவிழ்த்து அலைய விடலாம். மனம்,

## முதல் வேலை



தமிழகமே கொண்டாடும் 'தல' தன் வாழ்க்கையைத் துவங்கியது ஒரு டூவிலர் மெக்கானிக்காகத்தான். இன்று F1 ரேஸ் வரை அவருக்குள்ள ஈடுபாட்டுக்கான ஆரம்பம் அப்படித் துவங்கியதுதான். அதற்குப் பின்னர் கார்மெண்ட் நிறுவனத்தில் வேலை! பின் அதுவே காலப் போக்கில் அஜித்தின் சொந்தத் தொழிலாக மாறியது!

tamilmagazines.blogspot.com



சனிக்கிழமை மாலை வீடு திரும்பும் பள்ளிக்குழந்தை.

பிராணவாயுவால் மனிதர்கள் வாழ்கிறார்கள் என்று பள்ளிக்கூடத்தில் சொல்லிக் கொடுப்பது எவ்வளவு பெரிய பொய். ஈரத்தால் வாழ்க்கை நடக்கிறது. ஈரத்தை மூர்த்தியிடம் கண்டபோது, அவள் உற்சாகமடைந்தாள்.

அண்மைக் காலமாக சந்தியா, நகரத்தை விட்டு விடுமுறை நாட்களில் வெளியேறி இருட்டும் வரை சுற்றிக் கொண்டு இருந்து அறை திரும்பும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தாள். இப்படியான ஒரு பயணத்தின் போதுதான் ஆலப்பாக்கத்தை அவள் கண்டுபிடித்திருந்தாள். ஒரு சின்ன குன்று. அங்கே ஒரு புராதனக் கோயில். கோயிலுக்குப் பின்பக்கம் கலங்கல் அற்ற, சுத்தமான படிக்கட்டுகளைக் கொண்ட குளம். படிக்கட்டில் உட்கார்ந்து ஒரு நாள் பொழுதைப் போக்குவது அர்த்தமுள்ள காரியமாகப்பட்டது அவளுக்கு. கடைசிப் படியில் அவள் இருந்தால், அவளைப் பார்க்க வந்தாற்போல மொய்க்கும் மீன் குஞ்சுகள். குளக்கரைக்கு மேல் குடை பிடிப்பது போல ஒரு மரம்.

குன்றின் மேல் படிப்படியாக மிதித்து மேல் நோக்கிப் போவது,

**யாருடைய ஆசைப்படிதான் எது நடந்தது.**

அவளுக்குப் பிடித்திருந்தது. அப்படியே படிகள் இன்னும் மேலே இன்னும்மேலே என்று ஆயிரமாக வளரக் கூடாதோ என்று அவள் யோசிப்பதுண்டு. அப்படி எதுவும் நடப்பதில்லை. யாருடைய ஆசைப்படிதான் எது நடந்தது. ஒரு நாள் மதியப் பொழுது போல, மூர்த்தி ஒரு பெண்ணோடு படியின் பக்கம் வந்து அமர்ந்தான். அந்தப் பெண், மிகுந்த நட்பு தோன்றச் சிரித்து சந்தியாவைப் பார்த்து, "கோயிலுக்கு வந்தீங்களா?" என்றாள். அடுத்து ஐந்து நிமிஷத்தில் அவர்கள் அழுத்தமாக அறிமுகம் ஆனார்கள். "கோயிலுக்கு இல்லை" என்றாள் சந்தியா.

"இங்க வருகிறவர்கள், இந்தப் பழம் பஞ்சாங்கக் கிராமத்துக்கு உங்கள மாதிரி டவுன்காரர்கள்

tamilmagazines.blogspot.com



என்னத்துக்கு வருவார்கள்?"

"நீங்கள்..."

"இவன் என்னோட அண்ணன். ஊருக்கு வந்திருக்கான். கொஞ்சம் பெர்சனலாக பேசணும். அதுக்காக இங்க வந்தோம்."

"நான் என்னோட பேசணும். அதுக்காக வந்தேன்" அந்தப் பெண் சந்தியாவை புருவம் உயரப் பார்த்தாள்.

"இந்த மாதிரி பைத்தியம் போல இவன்தான் பேசுவான்னு நினைச்சேன். நீங்களுமா?"

ரஞ்சனியை மூர்த்தி அடக்கினான்.

"சாரி" என்றாள் ரஞ்சனி. "அதனால் என்ன பைத்தியமா இருக்கிறது தப்பா? எது பைத்தியம்னுதான் புரிஞ்சுக்க முடியலை."

"எங்க ஊர் சாமி, ரொம்ப சக்தி உள்ளவர். வேண்டிக்கிட்டா, கட்டாயம் நடந்துடும்."

சந்தியா, ரஞ்சினியை முகத்தை நோக்கி ஆராய்ந்தாள். குழந்தைத் தனம் மாறாத வளர்ந்த குழந்தை.

"நீங்க என்ன வேண்டிக்கிட்டீங்க?"

"ஃபைனல் எக்ஷாம்ல பாஸ் ஆகணும்னு வேண்டிக்கிட்டேன். நடந்துடுச்சு?"

"தேர்வு நீங்கதானே எழுதினீங்க?"

மூர்த்தி மட்டும் சிரித்தான். அடுத்த முறை, டவுன் பஸ் ஒன்றில் மூர்த்தியை சந்தியா பார்க்க நேர்ந்தது. டிரைவர் அருகில் அவன் நின்றிருந்தான். அவள் பின்னால் அமர்ந்திருந்தாள். அவன் முதுகு மட்டும் தெரிந்தது. பக்கவாட்டு முகம் தெரிந்தது. அவனை அழைத்து, அல்லது அவன் அருகில் சென்று பேசலாமா என்று நினைத்தாள். எதற்கு என்று அவளே கேட்டுக் கொண்டாள். மனித உறவுகள் கூடும் போது மனநோவுகளும் கூடுகின்றன. நட்பு என்பதே காசு கொடுத்து சூனியம் வைத்துக்கொள்வது போன்றது என்று சந்தியா நினைக்கத் தொடங்கி இருந்தாள்.

பழக்கம் ஏற்பட்ட பிறகு இந்த நிகழ்ச்சியை ஒருநாள் அவனிடம் சொன்னாள்.

## முதல் படம்

அஜித் வாழ்க்கையின் இரண்டாவது அத்தியாயம்தான் விளம்பரப் படம்! அதன் தொடர்ச்சியாக வந்த வாய்ப்பு ஒரு தெலுங்குப் படம். அதன் தயாரிப்பாளர் திடீர் என இறந்து போகவே அந்தப் படமும் பாதியிலேயே பறிபோனது!

tamilmagazines.blogspot.com

அன்று மூர்த்தியுடன் சந்தியா மயிலாசன மலையில் அமர்ந் திருந்தாள். நல்ல வேளையாக மூர்த்திக்கும் ஊர் சுற்றுவது பிடித்திருந்தது. எங்கெல்லாம், தரைமட்டத்துக்கு மேல் இடம் இருக்கிறதோ, குன்றோ மலையோ ஏதோ ஒன்று, மண்ணுக்கு மேலாக இருக்கும் ஓரிடம், அங்கே நீர் நிலை இருக்க வேண்டும், அதன் மடியில் அமர்ந்திருக்க வேண்டும், ததும்பும் தண்ணீரைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டும்.

தண்ணீர் எப்போதும் எதையோ சொல்லிக்கொண்டே இருக்கிறது.

ஆனாலும் 'பிரேம புத்தகம்' என்கிற தெலுங்குப் படம் இவரை திரைவுலகிற்கு அறிமுகப்படுத்தியது. ஸ்ரீதர் என்கிற பெயரில் அறிமுகம் ஆன அஜித்துக்கு சிறந்த அறிமுக நடிகர் என்கிற விருதும் அந்தப் படத்தில் கிடைத்தது!



மூர்த்தி சந்தியாவிடம் முதல்நாள் சந்திப்பின்போது தங்கை ரஞ்சனியுடன் பெர்சனலாகப் பேச அந்தக் குன்றிற்கு வந்த விஷயத்தைப் பற்றி ஒரு நாள் விளக்கினான். விஷயம் இதுதான். யாரோ ஒரு டையன். அவனிடம் அவளுக்கு ஈர்ப்பு. அவனுக்கும் அதிகமாக. கல்யாணம் பண்ணிக்கலாமா என்கிறான், என்ன செய்யலாம் என்று கேட்டிருக்கிறாள்.

"நீ என்ன சொன்னே" என்று சந்தியா கேட்டாள்.

"இதைப் பத்தி என்னிடம் பேசத் தோணியதே, அதுக்கு என் பாராட்டு. ஆனா, நான் எந்த முடிவையும் சொல்ல முடியாது. அதை நீயே எடுக்க வேணும். உன் வாழ்க்கை. உன் விருப்பம். இந்தப் பிராந்தியத்தில் யாரையும் நீ பிரவேசிக்க அனுமதிக்கக் கூடாது. இன்னொருவர் மூளையை, மனதை உனக்காக வேலை வாங்க நீ முயற்சிக்கும்போதே, நீ பலவீனம் அடைகிறாய். அதோடு, உன் பிரத்யேக உலகத்தை நீ விலை கூறி விற்கத் தொடங்குகிறாய். அப்பா அம்மா மூத்தவர்கள்தான். பெரியவர்கள்தான். ஆனாலும் அவர்களும் அன்னியர்கள்தான். அவர்கள் பிறப்புக்கு உதவுவார்கள். வாழ்க்கைக்கு அல்ல. தோற்றாலும் சுயமாகத் தோற்பதுதான் கௌரவம்."

"சரியாச் சொன்னே. என்ன நடந்தது?"

"கல்யாணத்தைத் தள்ளிப் போட்டிருக்கா."

"நல்ல காரியம். அன்பு

tamilmagazines.blogspot.com



முடியற இடம் கல்யாணமாகவா இருக்கணும்."

சந்தியா, ஒரு அரசு அலுவலகத்தில், என்ன சொல்வது, பணியா, வேலையா, கடமையா, தொழிலா, ஊழியமா, ஏதோ ஒன்றைச் செய்து கொண்டிருந்தாள். மாசச் சம்பளம் வந்து கொண்டிருந்தது. வீட்டுக்கு அனுப்பியது போக, அறைக்கு வாடகைக்குப் போக, உணவுக்குத் தந்தது போக, மீந்த பணம், மரியாதையா வாழப் போதும். லஞ்சம் வாங்கக் கூடிய இருக்கை தான். ஆனாலும் அதை மறுத்து விட்டாள்.

மூர்த்தி, ஒரு வேலைக்கு முயற்சித்துக் கொண்டிருந்தான். முன்னால், ஒரு பிரமுகரிடம் இருந்தான். கட்டுமானத் தொழில் செய்து கொண்டிருப்பதாகத்தான் அவன் நினைத்திருந்தான். மணல் திருட்டும் அரசியலும், அவரது முக்கியத் தொழில் என்று பின்னால் தெரிந்து கொண்டதும் வேலையை விட்டுவிட்டான். அவன் முதலாளி கவிதையும் எழுதினார். "ஏன் வேலையை விடுகிறாய். ஒரு இன்ஜினீயருக்கு மற்றவர்கள் கொடுப்பதை விடவும் அதிகமாகத் தருகிறேனே" என்றார் கவிஞர்.

மூர்த்தி, சந்தியாவிடம் சொன்னான்... அப்போது அவர்கள் பூந்தோட்டத்துக்குள் இருக்கிற ஓட்டலில், மரத்தடியில் போட்டிருக்கிற மேசைக்குப் பக்கம் அமர்ந்திருந்தார்கள். மஞ்சள் பூக்கள் பூத்துச் சொரிந்து கொண்டிருந்தன. நடைபாதையை மறைத்துக் கொண்டு பூக்கள் விழுந்து கிடந்தன.

"பூக்களை மிதித்துக் கொண்டு நடப்பது கஷ்டமா இருக்கிறது" என்றான் மூர்த்தி. அப்புறம் தொடர்ந்தான். "அது உண்மைதான். சாதாரணமாக பி.இ. படித்தவர்களுக்கு மற்ற காண்டிராக்டர்கள் தருவதை விடவும் அதிகம் தருகிறார் என்பதில் சந்தேகம் இல்லை. ஆனால், ஊழலுக்கு எப்படித் துணை போவது?"

"வேலையை விட்டதுதான் சரி. நம் காலத்தில் பிரச்னையே இதுதான். நம் பிரச்னை அது. ஏதோ ஒரு வகையில் ஊழல் பரவி எல்லார் இடத்திலும், இடம் கொண்டுவிட்டது. நம்மைக் காப்பாற்றிக் கொள்வதுதான் முதல் முக்கியம். என் மேசையில் ஒரு ஃபைல் வந்தது. அயோக்கியனுக்கு அனுமதி கொடுக்கச் சொல்கிறார் என் ஆபீசர். பயனாளி வாங்கிக் கொடுத்த பட்டுப் புடவையை ஆபீசர் பெண்டாட்டி தீபாவளிக்கு - கவனி - சாமிக்குப் படைத்து காலையில் கங்கா ஸ்நானம் செய்து விட்டு கட்டிக் கொள்கிறாள்.

tamilmagazines.blogspot.com

## முதல் குரல்

'தல'க்கு தமிழில் முதல் படம் அமராவதி. 1993-ல் வெளியானது. அஜித்தை தமிழ் மக்களுக்கு அறிமுகப்படுத்தியவர் இயக்குநர் செல்வா. அந்தப் படத்தில் அவருக்கு டப்பிங் குரல் கொடுத்தவர் விக்ரம்!



எனக்கென்னவோ, புடவையை அந்தப் பயனாளித் திருடனே அவளுக்குக் கட்டிவிட்டது போல் தோன்றுகிறது."

ஒரு மஞ்சள் மலர் கழன்று, மிதந்து, மிதந்து, இலைகளிடமோ கிளையிடமோ விடைபெறாமலே பெயர்த்துக் கொண்டு காற்றின் துணையோடு அவள் தலைமேல் வந்து தங்கி, பின் மேசை மேல வந்து உருண்டது. சந்தியா அந்தப் பூவைக் கையில் எடுத்து வைத்துக் கொண்டு சொன்னாள்.

"எப்படிப்பட்ட வாழ்க்கை இது. சத்தமே இல்லாமல், ஆர்ப்பாட்டம் இல்லாமல் எத்தனை நிறைவாக வாழ்ந்து முடிந்தது இது. இருந்தோம் என்பதுக்காக குதிக்கவும் இல்லை. போகிறோம் என்பதுக்காக புலம்பவும் இல்லை."

சற்று அமைதியாக இருந்து விட்டு, அவள் சொன்னாள்.

"யாரோடு சுற்றுகிறாய் என்று எந்தப் பூவுக்கும் அதன் அப்பா கடிதம் எழுதி அவமானப் படுத்துவது இல்லை."

"அப்பா எழுதி இருக்கிறாரா?"

"ஆமாம்."

"பதில் எழுதி இருக்கியா?"

"எழுதிவிட்டேன். 'அந்த மாதிரி சுற்றல் இல்லை. அப்படியான சுற்றலைச் சுற்றும்போது, உங்களுக்கு எழுதுவேன், எழுத வேண்டும் என்கிற கட்டாயமும் கடமையும் இல்லை எனக்கு என்றாலும் கூட...'ன்னு எழுதி இருக்கிறேன்."

தெருவிலே ஒரு பறவை செத்து வீழ்ந்து கிடந்து மருட்டல் தருவது போல ஒரு அழுத்தமான மௌனம் அவர்களுக்கிடையே கவிந்தது.

"நீ ஒன்றும் கவலைப்பட வேண்டாம் மூர்த்தி. இது என்னோட பிரச்னை. இதை எப்படித் தீர்த்துக் கொள்ள வேணும்னு எனக்குத் தெரியும். குளக்கரையில் உன்னைப் பார்த்த அந்த நிமிஷமே எனக்குத் தெரியும், நான் எதையெல்லாம் எதிர்கொள்ள வேண்டி இருக்கும் என்று."

அப்பா, மகளைப் பார்க்க வேண்டி அறைக்கே வந்தார்.

**(தொடரும்)**





2

பிரபஞ்சன்



# ஈரம்

எனக்கு ஒரு கனவு வந்துகொண்டிருக்கிறது, மூர்த்தி. சின்ன வயசு முதல், இப்போ வரைக்கும். ஏதோ ஒன்று என்னைத் துரத்திக் கொண்டு வருது. நான் ஓடிக்கொண்டே இருக்கேன். துரத்துவது யார் என்று பார்க்கத்தான் ஆசை. முடியலை. ஒரு மாடோ, குதிரையோ, காண்டாமிருகமோ ஏதோ ஒன்று தடிமனா. இரைக்க இரைக்க ஓடுவேன். அப்புறம் விழிச்சுக்குவேன். உடம்பெல்லாம் வேர்த்து வடியும். வேர்வையைத் துடைச்சுக்கிட்டு, சமயங்களிலே குளிச்சுட்டு அப்புறம் படுக்கும்படியா இருக்கும்.

தூக்கம் வராது. வாழ்நாளெல்லாம் என்னை யாரோ துரத்திக் கொண்டே இருக்காங்கன்னு அச்சத்தோடயே வாழ வேண்டி இருக்கு."

மூர்த்தி அமைதியாக சந்தியா சொல்வதைக் கேட்டுக் கொண்டு இருந்தான். பழங்காலக் கற்கோயில்கள் நிறைந்த ஊரில், பாறையின் மேல் அமர்ந்திருந்தார்கள் அவர்கள்.

"துரத்துபவர்களைக் கண்டுபிடிக்க முடிஞ்சதா?"

அவள் சற்றுநேரம் அமைதியாக இருந்துவிட்டுச் சொன்னாள்.

'ஒருத்தர் ரெண்டு பேருன்னா கண்டுபிடிச்சுடலாம். ஏகப்பட்ட பேராக இருந்தா எப்படி?'

சொன்னது போலவே, காலை பொலபொலவென்று விடியும் போது அப்பா வந்து சேர்ந்தார். இரவு முழுக்கப் பயணம் பண்ணிய சோர்வு. காலைப்பசி. எல்லாவற்றுக்கும் மேலே கோபம். அப்பாவுக்கு யார் மேல் கோபம்? கோபப்பட வேண்டியவர்களையெல்லாம் விட்டுவிட்டு, என் மேல் மட்டும் ஏன் மொன்னைக் கோபம்? யாருடனோ சுற்றுவதாகக் கேள்விப்பட்டாராம். சரி. அதனால் என்ன? மானம் என்ற ஒன்று அவருக்கு இருக்கிறதாம். நான் சொன்னேன். நான் பொய் சொல்வதில்லை, எந்தச் சூழ்நிலையிலும். துரோகம் செய்ததில்லை. யாரையும் காட்டிக் கொடுத்ததில்லை.

ஒரு பெண்ணுக்கு நேர்கிற அவலங்களிலேயே பெரிய அவலம், தன்னை நிரூபித்துக்காட்ட வேண்டி இருப்பதுதான். அப்பா, அது பரஸ்பரம் இரண்டு பேருக்குமே கௌரவம் இல்லாத விஷயம், இல்லையா. நான் அதைச் செய்யப் போவதில்லை. உங்கள் குழந்தைகள் மூடர்கள் இல்லை, அவர்கள் எந்தச் சூழ்நிலையையும் சமாளிப்பார்கள். ஆண்கள் நடுவிலே வாழ வேண்டி இருப்பதால் அதற்கேற்ப உடம்பையும் மனசையும் புத்திசாலித்தனத்தையும் பெண் அடைந்துவிட மாட்டாளா? மகளைச் சந்தேகிக்கும் தகப்பன்

**ஒரு பெண்ணுக்கு நேர்கிற அவலங்களிலேயே பெரிய அவலம், தன்னை நிரூபித்துக்காட்ட வேண்டி இருப்பதுதான்.**

தன்னையே அவமானம் செய்து கொள்கிறான்.. போங்கள்!'


அப்பா தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டு போனார்.

"அப்படி வருத்தப்படும்படி நீ பேசி இருக்க வேண்டியதில்லை."

"உடனே, நீ சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு அறிவுரை செய்யக் கிளம்பிவிடாதே. நான் அவர் மகள் என்பதைக் காட்டிலும், மனுஷி என்பது எனக்கு முக்கியம். பெண்ணை ஆக்ரமிக்கிறவர்கள் எல்லோரும் அப்பா, அண்ணா, கணவன் என்ற உரிமையில்தான் அதைச் செய்கிறார்கள். அவர்கள் இடத்தை அவர்களுக்கு, அவர்கள் உரிமையை அவர்களுக்கு ஆரம்பத்திலிருந்து உணர்த்திவிடுவதுதான் என் ஆரோக்கியத்துக்கு நல்லது."

"இவர்களோடுதானே வாழ வேண்டி இருக்கிறது..'

"அதனாலதான் அப்படி இருக்க நேர்ந்துவிடுகிறது. காலேஜ் நாட்களில் ஒரு பையன் என்னுடன் நெருக்கமாக இருந்தான். எனக்கும் அவன் மேல் ஈர்ப்பு இருந்தது. அண்ணனுக்குப் பொறுக்கவில்லை. கடுமையாகப் பேசினான். அந்தப் பையனையும் மிரட்டினான். நான், 'ஜாக்கிரதை. உன் மரியாதையைக் கெடுத்துக் கொள்ளாதே. நான் எதைச் செய்கிறோனோ, அதைத்



தெரிந்தே செய்கிறேன் என்று சொன்னேன். வீட்டில் அல்ல. நான் அந்தப் பையனுடன் ஒரு ரெஸ்டாரன்ட்டில் இருந்தபோது இந்த முட்டாள் கலாட்டா பண்ணினான். ஒரு கட்டத்தில் அவனை அறைய நேர்ந்தது. பெண்களுக்குப் பலம் இல்லை என்று பலமில்லாத முட்டாள்களே சொல்கிறார்கள். பலமும் வீரமும் மனசில். உன்னையும் ஒரு அடியில் வீழ்த்த முடியும், என்னால!'

மூர்த்தி சொன்னான்.

"ஆண்மை என்று ஒன்று இல்லை. அது போலப் பெண்மை என்ற ஒன்றும் இல்லை. மனிதத் தன்மை என்ற ஒன்றுதான் இருக்கு. ஆண்மை அல்லது ஆளுமை என்ற வார்த்தையைத்தான், ஆண்கள் தங்களுக்குச் சாதகமாக ஆண்மை என்று மாற்றிக்கொண்டார்கள்."

வரும் வழியில் நுங்கு, இளநீர், பஜ்ஜி என்று கண்ணில் பட்டதையெல்லாம் வண்டியை நிறுத்தி வாங்கிச் சாப்பிட்டுக்கொண்டே வந்தாள் சந்தியா.

"ராத்திரி சாப்பிடப் போவதில்லையா, நீ"

"எனக்கு, உன்னைப் போன்ற ஒரு சிநேகிதன், இட்லிகளைப் பொட்டலம் கட்டி வைத்துக் கொண்டு காத்திருப்பான். நான் மறந்தாலும் என்னை மறக்காத பையன். மழை, அவனுக்காகத் தான் பெய்கிறது. உடனே, உன் விஞ்ஞான மூளையைத் தட்டி எழுப்பாதே. அதோ அந்த ஆலமரம் போல இருப்பான்."

சந்தியா, தன் விடுதிக்கு வந்து சேர்ந்தபோது இரவு பத்துக்கு மேலாகி இருந்தது. பகல் அழுக்கைக் கழுவிக் களைவது அவள் வழக்கம். குளித்தாள். இரவு உடைக்கு மாறினாள். அறைக்கதவைத் தட்டும் சப்தம் கேட்டது. திறந்தாள். அந்த முஸ்லிம் பையன் கொடுத்துட்டுப் போனான் என்று சொல்லிக் கொண்டு இட்லிப் பொட்டலத்தைத் தந்தாள் விடுதிக் காப்பாளி.

"அவன் பெயர் சுலைமான்" என்றாள் சந்தியா.

"அது எனக்குத் தெரியாது. மணி, பத்துக்கு மேலாகிவிட்டது. விடுதி சட்டப்படி ஒன்பது மணிக்குள் எல்லோரும்..."

"வந்து கூட்டுக்குள் அடைஞ்சுடணும், தெரியும். வேலைகள், ஒன்பது மணிக்குள் முடியவில்லை. என்ன பண்ணுவது."

"அப்படியென்றால், நீங்கள்..."

"அடுத்த மாதம் காலி பண்ணிக் கொள்கிறேன்."

காப்பாளி, அழுக்கு

**"நம் அரசர் ரொம்பவும் அல்பம்னு எதை வைத்துச் சொல்கிறீர்கள்?"**

**"நகர்வலம் செல்வதற்கெல்லாம் நிதிமந்திரியிடம் டிராவல் கன்வேயன்ஸ் கேட்டு நச்சரிக்கிறாரே!"**

உள்ளாடையைப் பார்ப்பது போல் சந்தியாவைப் பார்த்து விட்டு அகன்றாள். இப்போது சந்தியாவுக்குப் புது பிரச்னை. அடுத்த மாதத்துக்குள் புது அறை தேட வேண்டும்.

அவள், ஒரு சி.டி.யை எடுத்து இயக்கிச் சுழல விட்டாள். அறை, இசையால் நிரம்பியது. ஷிவ்குமார், குர்ஜாரி தோடியில் இருந்தார். எதனாலோ, சௌக்யமு



லேது என்கிற சப்தம் மனதில் தோன்றியது. தோடி சாமத்தைக் கொண்டு வருமா என்ன. அழுகை அடைத்தது. அவள் கண்களில் நீர் திரண்டது. அந்த அமைதியைக் கத்தியைக் கொண்டு கிழித்தது போல செல்பேசி அழைத்தது. யாராக இருக்கும் இந்த அபஸ்ருதி. எதிர்முனையில் ரகு.

"என்ன இந்த நேரத்தில்?" எரிச்சல் தோன்றும்படியாக அவள் பேசினாள்.

"பகல் முழுக்க நாலு முறை கூப்பிட்டேன்."

"ஸ்விட்ச் ஆஃப் பண்ணி வச்சிட்டேன். தொந்தரவுக்கு அதுதான் என்பதில்."

"எங்கே போயிருந்தே?"

எரிச்சல் மண்டியது. ஒரு ஆண் அவளை எதிர்ப்படுகிறான்.

"என் நண்பரோடு அவுட்டிங்."

கொத்தும் திகைப்புடன் ரகு பேசியது மகிழ்ச்சியாக இருந்தது. சே. இது என்ன தாழ்ந்த விளையாட்டு. தான் அதைச் செய்யலாமா. அவன் போல் நான் மாறுவது எனக்கு இழுக்கு.

"நான் உனக்குப் பலமுறை சொல்லி இருக்கேன். இப்படி எல்லாம், இந்த நேரத்தில், எந்த நேரத்திலும் பேசாதே. கௌரவமான மனிதனாக இரு ரகு."

அவள் முடித்துக்கொண்டாள். சராசரியாக, ஆண்டுக்கு ஒருத்தன் அவளைக் குறுக்கிடுகிறான். நடனம் ஆடி அவளைக் கவர முயற்சிக்கிறான். சர்க்கஸ் பபூனைப்

போல ஆடை அணிந்து கொண்டு நகைச்சுவை காட்டுகிறான். இதற்கெல்லாம் என்ன பெயர்? என்ன அர்த்தம்? எல்லாம் இன்னொரு நிலத்தை ஆக்ரமிக்கிற எத்தனிப்பு அல்லாமல் வேறு என்ன? ஆக்ரமிப்புக்குப் பிறகு என்ன நடக்கும்? அதிகாரம் நடக்கும். அதிகாரத்துக்குப் பயன் அடிமைத்தனம். அது விஸ்தரிக்கப்படும். அடிமைகளின் எண்ணிக்கை பெருகப் பெருக ஆண்டைகளுக்கு மகிழ்ச்சி. அடிமை ஒன்று உருவாகும்போது, ஆண்டையும் அடிமையாகிறான் என்பதை இந்த முட்டாள்கள் ஏன் அறிவதில்லை?

மறுநாள் அலுவலக மதிய உணவு வேளை கடந்தும் தன் இருக்கையில் அமர்ந்து முடிக்க வேண்டிய வேலையில் ஆழ்ந்திருந்தாள் சந்தியா. எதிரில் இருக்கும் நாற்காலியில் வந்து அமர்ந்தான் ரகு.

“சந்தியா, ஏன் என்னைப் புறக்கணிக்கிறே?”

“நீ பொருட்படுத்தப்பட வேண்டியவன்னு நான் நினைக்கலே.”

“நீ என்னை அவமானப்படுத்தறே!”

அவன் மேலும் தன் அசட்டுத் தனத்தை விரிக்கத் தொடங்கினான். சந்தியா எழுந்து நின்றாள். கையைக் கதவுக்கு நேராக நீட்டிச் சுட்டினாள். அவள் முகம் அவள் சொல்ல வேண்டியதைத் தொடர்ந்து உணர்த்தியது. ரகு வெலவெலத்துப் போனான். அவள் உடல்மொழி மிக உரத்துக் கேட்டதை முட்டாளும் உணரும்படி இருந்தது. ரகு எழுந்து நடந்தான். சரியாக அதே நேரம் எம்டி உள்ளே நுழைந்தார்.



சந்தியா நின்ற நிலையை, அவள் கையை, கதவைச் சுட்டிய விரலையும், ரகு பம்மிப் பம்மிப் போவதையும் அவர் பார்த்தார். அவருக்கு எல்லாம் விளங்கியது.

“என்ன நடக்கிறது இங்கே” என்றார்.

“ஒன்று மில்லை சார். சின்ன

விஷயம்."

"ரகு இங்க வா. என்ன, திரும்பவும் ஆரம்பிச்சுட்டியா....' எம்.டி அறையில் விசாரணை நடந்தது. சந்தியா சொன்னாள். 'ஒன்றுமில்லை சார். ரகு தங்கை காலேஜ்ல சேரப் போறால்லியா.. அதுக்காக சுரிதார் வாங்கணும் அவனுக்கு. எந்தக் கடையில வாங்கலாம்னு கேட்டுக்கொண்டிருந்தார்."

முறை உன்னை யாராலும் காப்பாற்ற முடியாது. போ!"

ரகுவும் சந்தியாவும் வெளியே வந்தார்கள்.

"ரொம்ப நன்றி சந்தியா."

"தேவை இல்லை. இன்னொரு முறை எனக்குத் தொந்தரவு பண்ணாதே."

"எதுக்காக என்னைக்

"புறமுதுகிட்டு ஓடிவரும் நம் அரசரை பயங்கர ஆயுதங்களுடன் அண்டை நாட்டு அரசர் துரத்திவருவது, நியாயமல்ல!"
"நம் அரசர் தனியாக ஓடிவராமல் அண்டை நாட்டு அரசியையும் அழைத்துக்கொண்டு வருவது மட்டும் என்ன நியாயம்?"
- குட்டி மு.வெங்கடேசன்

எம்.டி. சந்தியாவை உற்றுப் பார்த்தார்.

"நீ இவனைக் காப்பாத்தலாம்னு நினைக்கிறே... இவனைக் காப்பாற்ற அந்த நேரம், பல பெண்களுக்கு நீ எதிரா இருக்கே."

மெல்ல சந்தியா சொன்னாள்.

"அசட்டுப் பையன் சார். மன்னிச்சிடுங்க"

"ரகு... ஆபீஸ் சூழ்நிலையையே கெடுத்துக்கிட்டு இருக்கே. இப்ப சந்தியா உன்னைக் காப்பாத்திட்டிருக்காங்க. அடுத்த

காப்பாத்தினே?"

"உன் குடும்பம் கஷ்டப்படக் கூடாதுன்னு. நீ அசட்டுப் பையன், அயோக்கியன் இல்லை."

"இல்லை. வேறு காரணம்?"

"என்ன காரணம்?"

"நீ என்னைக் காதலிக்கிறே. அதானே காரணம்?"

இவனை என்ன பண்ணலாம் என்று அவனையே பார்த்துக் கொண்டு நின்றாள் சந்தியா.

**(வளரும்)**

**சந்தியாவுக்குப் பல பெயர்கள், சிட்டுக்குருவி, பட்டாம்பூச்சி, கால்களில் சக்கரம் கட்டியவள் என்று. எங்கும் இருப்பாள். வீட்டில் சோபாவில் ஏதாவது வைத்துக்கொண்டு விளையாடுவாள். சட்டெனத் தோட்டத்தில் இருப்பாள். தெருவில் பலூன்காரரோடு வேடிக்கை பார்த்துக்கொண்டு நடப்பாள். தெருவில் யானை வரும். பிச்சை கேட்கிற யானை. பிச்சை வாங்கிக் கொண்டு தலையில் கையை வைத்து ஆசி சொல்லும் யானை. அதன் பின்னால் கூச்சலிட்டுக் கொண்டு நடப்பாள்.**


எல்லாம் இப்போது இல்லை. வீட்டின் இருட்டு மூலையில் அடைந்து கிடப்பாள். அம்மாவைக் கட்டிக்கொண்டு இருப்பாள்.

அந்த மாலை, ஒரு கரடி வேஷம் போட்டவனைத் தொடர்ந்து வெகு தூரம் போனாள். ஒரு சவுக்குத் தோப்பின் ஊடாக நடந்தாள். பகலிலேயே இருட்டு பரவிய மரச் செறிவு. தன்னைத் தொடர்ந்து யாரோ ஒருவர் வருவது தெரிந்தது. அதன் பிறகு, வீட்டுக்குள்ளேயே அடைந்து கிடந்தாள். வெயிலைப் பார்க்கவும் பயந்தாள். கோடு கிழித்தது போலச் செல்லும் எறும்புக் கோடும் அவளுக்குப் பயம் தந்தது. கைக்குழந்தையாக இருந்தாள் தங்கை ரஞ்சனி. குழந்தை அழுதால் கூட அவள் பயந்து, உடம்பு வெடவெடக்க அம்மாவை ஒண்டிக் கொண்டாள்.

சந்தியா மூர்த்தியிடம் சொன்னாள்.

"அதுக்குப் பிறகு, கண்ணைத் திறந்தால் இருட்டு மட்டும் தெரிந்தது மூர்த்தி. அடிக்கடி வலிப்பு வந்தது. பேச்சு திக்கியது. என்னை சித்தி வீட்டுக்கு அனுப்பி வச்சது அம்மா. சித்திதான் என் உயிரை மீட்டுத் தந்த கடவுள்.

# ஈரம்




# 3

பிரபஞ்சன்



எல்லா ஆம்பிளையும் கெட்டவர்கள் இல்லை என்ற புரிதலை அடைய எனக்கு எட்டாண்டுகள் பிடித்தன. பகலில், காய் கறிக்கடைக்குப் போய், வாங்கிக் கொண்டு திரும்பும் தைரியம் எனக்கு அப்புறம்தான் வந்தது. அப்புறம் நிறைய எக்சாம்கள். எப்படியோ படித்து தேறி, வேலைக்கும் சேர்ந்து விட்டேன். இல்லையென்றால், பிச்சைக்காரியாகத் திரிவேன். இப்போதும், புது ஆண் என் பக்கத்தில் வந்து நின்றால் எனக்கு உடம்பு நடுங்கத் தொடங்கும்."

"அப்புறம் என்ன, யார் நீ என்கிற பதற்றம் வரும்.
முன்னால் இருப்பவரை
அடிக்கலாமா,
தூக்கலாமானு தோன்றும்."



சிரித்துக்கொண்டு சந்தியா சொன்னாள்.

"சாரி. உன்னிடம் கூட அப்படித்தான் நடந்து கொண்டேன். நம் முதல் சந்திப்பில், கூட்ட நெரிசலில் விபத்தாக சாய்ந்த உன்மீது கோபப்பட்டு அடிக்க கைதூக்கியதும் அப்படித்தான்!"

"ஏன். இப்படி எரிமலை மாதிரி எரிந்து கொண்டிருக்கிறாய்?"

"உண்மையைச் சொல்லட்டுமா. என் கோபத்தில் பெரும்பாலும் பொய். கோபக்காரி, எரிச்சல் படுபவள். மனதத்துவப் பிரச்னைக்காரி என்றெல்லாம் என்னைப் பற்றிய அபிப்பிராயத்தை நானே படர விட்டேன். பாதிக்கு மேல் ஜனங்கள், ஆண்கள் என்னிடம் இருந்து ஒதுங்கிக் கொண்டார்கள். ஒருவன் என்னிடம் இருந்து விலகும் போது, ஒரு பிரச்னையும் என்னிடம் இருந்து விலகுகிறது."

"ஆண்கள்,

பார்த்தவுடன் கையைப் பிடிக்கிறார்களா?"

"இல்லை. அது எனக்கும் தெரியும். எல்லா ஆண்களும் பெண்களும், பெண்கள் மேல் மோசமான அபிப்பிராயம் கொண்ட சமூகத்தின் தயாரிப்புகள் தானே. நட்பு கொண்டு, பழகி, அதுக்குப் பிறகு பிரிகிற வலியை முன் கூட்டியே தவிர்த்துக் கொள்ளலாம் தானே?"

"விலகி விலகிப் போவதால் அனுபவத்தையும் சிநேகத்தையும் நீ இழக்கிறாயோ என்று எனக்குப்படுது. இருந்தாலும் இது உன் வாழ்க்கை!"

"கரெக்ட். நான் என் கதவுகளைச் சாத்திக்கொள்ளவே ஆசைப்படுகிறேன். இது என் வாழ்க்கை. இது எனக்களிக்கப்பட்ட ஒரு கோப்பைத் தேநீர். இதை நான் உட்கார்ந்தும் சாப்பிடுவேன். நடந்து கொண்டும் ஆடிக்கொண்டும் கூடச் சாப்பிடுவேன்."

"சாப்பிடலாம். ஆனால் தேநீரைச் சிந்திவிடக் கூடாது. இன்னொரு கப் தேநீர் தரப்பட மாட்டாது."

## நண்பர்களைத் தேர்வு செய்வதில் நான் ஒரு முட்டாள்!

"தெரியும். எனக்கு நிறைய தேனீர்க் குவளைகள் தரப்பட்டனதான். ஆனால் அவைகளில் தேநீர் இல்லை!

நண்பர்களைத் தேர்வு செய்வதில் நான் ஒரு முட்டாள். நீட்டப்படும் கைகள் எது என்றாலும் நான் பற்றிக் கொள்கிறேன். அது பேயின் கைகளாகவும் இருக்கக் கூடும் என்று நான் யோசிப்பதே இல்லை. ஒரு மழை நாள். மழை, கல்யாணவீட்டுப் பன்னீர்த் தூவல் மாதிரி இருந்தது. நான் என் சிநேகிதி பிலோமினா திருமண வரவேற்பில் கலந்து கொண்டுவிட்டு வீடு திரும்ப பஸ்சுக்குக் காத்திருந்தேன். பிலோமினாவின் சிநேகிதன் ஒருவன் அப்போதான் அறிமுகமானவன். என் இலைக்கு இனிப்பு பரிமாறியவன். நிறைய சிரிக்கிறவனாக இருந்தான். நான் இனிப்பு சாப்பிடுவதில்லை என்றேன். 'ஏன்' என்றான். 'சொல்றதுக்கில்லை' என்றேன். 'ஸ்வீட், உடம்பை பெருக்க வைத்துவிடும் என்கிற பயமா?' என்றான். 'என் உடம்பைப் பற்றி நானே கவலைப்படுவதில்லை.

நீ எதுக்குக் கவலைப்படுகிறாய் என்றேன். நான் உடம்பல்லவே. பேசாமல் போய்விட்டான். என் வீட்டைக் கடந்து தான் அவன் போக வேண்டி இருக்கும். ஆகவே, 'என் வண்டியில் போகலாமே' என்றான். 'சரி' என்றேன். என் பிரச்னை இங்குதான் தொடங்குகிறது, மூர்த்தி. யார் முகத்தையும் வாடச் செய்துவிடக் கூடாது என்பதுக்காக, எனக்குப் பிடிக்காததையும் செய்வது என் பலவீனம்.

கோபக்காரியாக வேஷம் போட்டு மனிதர்களைத் தடுத்துக் கொள்கிறேன். யார் கையையும் பற்றிக் கொள்கிறேன். மனத்தத்துவம் படித்த நண்பன் நான் உடைந்து போனவள் என்கிறான். இருக்கட்டுமே. உடையாமல் இருப்பவர் யார்? உடைவது கண்ணாடியாக மட்டும் தானே இருக்கக் கூடாது. இருந்தால் என்ன அவன் வண்டியின் பின்னால் அமர்ந்து கொண்டேன். வண்டி போய்க் கொண்டிருந்தது. அடுத்த ஆறு மாதம், ஒரு வருஷம் அவன் வண்டியின் பின்னால் நான் போய்க் கொண்டே இருந்தேன். பல நாட்கள் எனக்குத் தோணும். எதுக்கு இது? இதனால் நான் என்ன பெறுகிறேன்? பெற்றேனா, தருகிறேனா, என்னதான் நடக்கிறது? ஒன்று தெளிவாகப் புரிந்தது. அவன் ஊசி. நான் நூல். அவன் வழி நான் போய்க் கொண்டே இருந்தேன்.

எனக்கு அவனைப் பிடித்திருந்தது. அவனைப் பார்க்கவும், பேசவும், அவனோடு இருக்கவும் எனக்குப் பிடித்தது. எனக்குள் வெற்றிடம் நிரப்பப்படுவதுபோல



எனக்குத் தோன்றியது. அல்லது நிரம்பப்பட்டிருப்பது காலியாக்கப்பட்டதா, தெரியவில்லை.

படிகள் ஒவ்வொன்றாக ஏறிக் கடந்தோமா. அல்லது இரண்டு இரண்டு படிகளாக ஏறினோமா, தெரியவில்லை. இது காதல் என்று நான் தப்பினேன். காதலில் என்ன இன்பம். காதலிக்கப்படுகிறோம் என்பதுதானே. அது என்னைச்

சந்தோஷத்தில் ஆழ்த்தியது. காதலில் அடுத்தவளின் இயல்பு, இயற்கை, கலை, தேர்வு, வண்டி, ஒழுக்கம் இவை எல்லாம் கவனிக்கப்பட வேண்டும் என்கிறார்கள். சரிதான். பிரச்னை என்ன என்றால், இதை எல்லாம் காதலர்கள் கவனிக்கிறார்களா என்பதுதான். ஒரு பரவச மேகம் வந்து அவர்கள் இருவரையும் மூடி விடுகிறதே. அந்த மேக மூட்டத்தில் அவர்கள் அவர்களையே பார்க்க முடிவதில்லையே. அப்புறம் மற்றவரை ஆராய்வது எப்படி? ஆனால், அது அப்படித் தானே இருக்கிறது. காதல் என்பது உடம்பா. ஆத்மாவா? தெய்வீகக் காதல், நாத்திகக் காதல் என்றெல்லாம் காதல்கள் இருக்கின்றனவா?

“கபாலி லேசில் பிடிபட மாட்டானே! எப்படி பிடிபட்டான்?”

“பாவம்... புரமோஷன் கிடைக்க வழிபண்ணுன்னு ஏட்டய்யா கெஞ்சினாராம்!”

-கே.கே.குமரகுரு

உடம்பு இல்லாமல் உயிர் ஏது? உடம்பு இல்லாமல், வீடு, வாசல், வேலை, சம்பளம் எல்லாம் எதுக்கு? காதல், கல்யாணம் என்றெல்லாம் தான் எதுக்கு. ஆனால், உடம்பை உடம்பா இயக்குகிற நம் உணர்ச்சிகள். அந்த உணர்ச்சிகளை நம் வாழ்க்கை முறை, படிப்பு, பண்பாடு, சமூகம் பற்றிய பயம் இவை எல்லாம் தானே இயக்குகிறது. பயம். பயம்தான். தனியார், சமூகம் தருகிற பயம். அப்பா, அம்மா, உறவுகள் தருகிற பயம்.

'பயம் எதுக்கு' என்றான் அவன். அவன்தான் என் காதலன். பெயர் வேண்டுமே. சதாசிவம் என்று வைத்துக்கொள்.

“நீ நெருப்பா தண்ணீரா என்று தெரியவில்லையே. எப்போது சுடுவாய். குளிர்வாய். புரியவில்லையே!”

“நாம் சந்தித்து ஒரு வருஷத்துக்குமேல் ஆகிவிட்டது. சந்தியா” என்றான் சதாசிவம்.

“சதா. ஒரு ஆயுளை உன்னோடு இணைத்துக்கொள்வதுதான் கல்யாணம் என்றால், ஒரு வருஷம் பெரிசா. எனக்கு இன்னும் உன்னைப்பற்றிய சித்திரம் முழுசாக உருவாகவில்லை, என்ன செய்யலாம்”

“உருவாகும் என்று நம்புகிறாயா.”

“தள்ளிப் போடலாம்”

தள்ளிப்போட்டோம்.

அவன் உள்ளுக்குள் காயம் பட்டிருக்கிறான் என்று எனக்குப் புரிந்தது. ஆனால் எனக்கும் பயம். தப்புதான். என் சொந்த அனுபவம் இன்னொருவனை வளைத்துக் கொண்டிருக்கிறது. நாங்கள் இருவரும் ஆறு மாத காலம் பிரிந்திருப்பது என்று ஒரு யோசனையை நான் சொன்னேன்.

"எதுக்குப் பிரிவது?"

"பிறகு சேர்ந்து கொள்ள!"

"பிரிந்திருப்பதால் என்ன பிரயோசனம்!"

"பிரிவு, உக்கிரமான நினைப்பை ஏற்படுத்தும், பரஸ்பரம் நம் இருவர் பற்றியும் நாம் இடைவிடாது சிந்தித்துக் கொண்டே இருப்போம். சாதக பாதகம் தெளிவாகத் தொடங்கும். பாதகம் அதிகமானால், அப்படியே பிரிந்துவிடலாம் இல்லையா!"

அவன் திகைத்துப் போனான்.

"சதா.... உனக்கும் யோசிக்க ஒரு சந்தர்ப்பம் வாய்க்குமே. எதிர்காலம் நமக்கு நன்றாக இருக்க வேண்டும் என்றால், இந்த முயற்சியை நாம் மேற்கொள்ளத்தான் வேண்டும்."

அதற்குப் பிறகு, அவன் செயல்படத் தொடங்கினான். தினம் குறைந்த பட்சம் ஆறு முதல் பத்து குறுஞ்செய்திகள் அனுப்பத் தொடங்கினான். பக்கம் பக்கமாக இ. மெயில் அனுப்பிக் கொண்டிருந்தான். என் அலுவலகம் முன், எதிர் பிளாட்பாரத்தில் இருந்த புன்னை மரத்தின் கீழ் நின்று என் கவனத்தைக் கவர்ந்து கொண்டிருந்தான். என் தெருவில் மேலும் கீழும் தன் பைக்கில் சுற்றிக் கொண்டிருந்தான். நாளாக நாளாக, என்னதான் நடக்கிறது என்று நானும் இதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தேன். அம்மாவிடம் ஒரு நாள் இதை நான் பேசினேன்.

'ஜாக்கிரதை' என்று சொன்னதோடு நிறுத்திக்

> ''இப்ப எல்லாம் 'பிளேன்'லதான் வர்றீங்க! உங்க கை மேலே போயிட்டுது!''
>
> ''அதில்லீங்க! 'டோல்கேட்'ல பணம் கட்டி கட்டுப்படியாகலே!''
>
> -கே.கே.குமரகுரு

கொண்டாள். அப்பா, 'எப்படியாவது ஒழி' என்றார். அவருடையது அந்த பாஷை. இதுக்கு அப்புறம் தன் ரத்தத்தைத் தொட்டு எனக்குக் கடிதம் எழுதினான்.

மனிதர் எல்லோர்க்கும் ஒரு பலவீனமான தருணம் இருக்குமே.

எனக்கும் அது வந்தது.

நாங்கள் ஒரு உணவு விடுதியில் சந்தித்தோம். கல்யாணம் என்கிற இனம் தெரியா பிரதேசத்துக்குள் அல்லது தெரிந்தே விழுகிற கிணற்றுக்குள், அவன் அதைச் சொர்க்கம் என்றான், விழலாமா என்று கேட்டான்.

'சரி' என்றேன்.




பேருந்து நிலையத்துக்கு முன் காலை ஐந்து மணிக்குச் சந்திப்பது என்று முடிவெடுத்தோம். மாற்றுக்கு நாலு துணி போதும் என்றான் அவன். எங்கள் திட்டம், ஆறு மணிக்கு கோயிலில் வைத்துக் கல்யாணம் பண்ணிக் கொள்வது. அவன் கார் எடுத்துக்கொண்டு வருவதாகச் சொன்னான்

நான் சரியாக என் பெட்டியுடன் பேருந்து நிலைய வாசலில் இருந்தேன். நான் செல்லில் அவனை அழைத்தேன். செல் ஆஃப் பண்ணி வைக்கப்பட்டிருந்தது.

ஆறு மணி ஆயிற்று. எட்டும் ஆயிற்று.

அவன் வரவில்லை.

சுமார் ஒரு மாதத்துக்குப் பிறகு அவனை எதேச்சையாக ஒரு உணவு விடுதி வாசலில் சந்தித்தேன்.

"என்ன சதா. கார் கிடைக்கலியா" என்றேன்.

அவன் முகம் மேலும் அசட்டுத்தனம் பெற்றது. என்னவோ உளறினான். யாரோ ஒரு திருடனைப் பார்ப்பதுபோல், ஒரு காமுகனைப் பார்ப்பது போல் எனக்குத் தோன்றியது நான் பேச்சை நிறுத்திக் கொண்டு அகன்று விட்டேன்..

"மூர்த்தி.. இப்படியாக இருந்தது என் அனுபவம். இந்த அனுபவத்தைக் கொண்டு, மனித வர்க்கத்தையே சந்தேகிக்கக் கூடாது. ஆனாலும் சந்தேகிக்கிறேன். நீ எப்படி?"

அவன் அதிர்ச்சியுடன் சந்தியாவைப் பார்த்தான்.

**(வளரும்)**

மினி தொடர்

# அறம்

## 4

பிரபஞ்சன்



நீ எப்படி என்று மூர்த்தியைப் பார்த்து சந்தியா கேட்ட கேள்வி, அவனை அதிர்ச்சியடைய வைத்தது. ஒரு அயோக்கியனின் கதையைச் சொல்லிவிட்டு நீ எப்படி என்றால் என்ன அர்த்தம்? அவன் முகம் லேசாக இருண்டதை சந்தியா பார்த்தாள்.

"சாரி. உன்னைக் காயப்படுத்த வேண்டும் என்று நான் அப்படிச் சொல்லலை. நீன்னு நான் மூர்த்தியைக் கேட்கலை. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக சந்தியாக்களுடன் பழகுகிற மூர்த்திகளில் நேராக இருப்பதால் உன்னைக் கேட்கிறேன்" என்று உண்மையாகவே வருத்தம் தெரிவிக்கும் மனோபாவத்துடன் சொன்னாள் சந்தியா.

மூர்த்தி, அவள் கண்களைப் பார்த்துக்கொண்டு கேட்டான். "உனக்குச் சில நபர்களால் அல்லது ஆண்களால் சங்கடம் ஏற்பட்டிருக்கிறது.



உண்மைதான். உனக்கு மட்டுமில்லம்மா. இந்த நாட்டில் பல பெண்களுக்கு, அவர்கள் பெண்கள் என்பதாலேயே பிரச்னை ஏற்பட்டிருக்கிறதுதான். அதனால், நான்கைந்து அயோக்கியர்களை முன்னால் நிறுத்தி ஆண்களே அயோக்கியர்கள் என்ற முடிவுக்கு வந்துவிடுவது எந்த அளவுக்குச் சரி?!

“உண்மைதான். யாரோ ஒன்றிரண்டு பெண்களைக் கொண்டு, பெண் இனத்தைப் பேசுவது எப்படி தவறோ அப்படித்தான் இதுவும்.. ஆனால், ஒன்று புரிந்து கொள் மூர்த்தி, என்னை நடுவில் வைத்து, பத்துப் பேய்கள் சுற்றிச் சுற்றி வந்து என் ஆடையைக் கிழிப்பது போல, என்னைச் சுற்றி இருக்கும் எல்லாம், எல்லாமும் என்னைக் குறிவைக்குதுப்பா.. என் ஆபீசர் சொல்றான். ‘நீ தனியாள் தானே.. ஞாயிற்றுக்கிழமையும் வந்து ஃபைல்களைக் குளோஸ் பண்ணே’ங்கறான்.. தனிப் பொம்பளைக்கு வீடு இல்லேங்கறான் வீட்டுக்காரன். வீட்டுக்குள்ளேயே ஆம்பிளைப் புள்ளைக்குக் கொம்பு முளைச்சதா தாயே முட்டாள் தனமா நினைக்கிறா. எல்லாமே பொம்பிளைக்கு எதிராத்தானே இருக்கு.. அப்புறம் நம்பிக்கை எப்படி வரும்?”

மூர்த்தி பதில் பேசாமல் கேட்டுக் கொண்டிருந்தான்.

**அன்பு செலுத்த ஒரு உயிர் தேவை. உனக்கு கிளி!**

மூர்த்தியின் சகோதரி அன்று மதியம் போல சந்தியாவைப் பார்க்க அலுவலகம் வந்தாள். பெர்மிஷன் போட்டுவிட்டு அவளை அழைத்துக் கொண்டு நல்ல உணவு விடுதி தேடிச் சென்றாள். எதிர்பார்த்தபடி கூட்டம் இல்லை. கூட்டம் இருந்தால் சப்தம் இருக்கும். ஆண்ட இனத்துக்கு சப்தம் இல்லாமல் பேசத் தெரியாது. ஒரு மூலையில் போய் அமர்ந்தார்கள்.. ரஞ்சனி வெளிநாடு சென்று படிக்க வாய்ப்பு கிடைத்திருக்கிறது. செலவை, அவன் பணியாற்றும் நிறுவனமே ஏற்றுக்கொள்ளும்.

ரொம்ப நல்ல விஷயம். இரண்டு வருஷங்கள் போனது தெரியாமல் போய்விடும். ஆனால் திரும்பி வந்த பிறகு வாழ்க்கை வசதியாகிவிடும். இதைச் சொன்னாள் சந்தியா. வெளிநாடுகளைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால் இந்தியாவில்தான் வேலை செய்ய வேண்டும். ரஞ்சனி மீன், இறைச்சி



சாப்பிடக் கூடியவள். வெளிநாடு வாழ்க்கை பிரச்னை இருக்காது.

சட்டென்று நினைவுக்கு வந்ததால், சந்தியா கேட்டாள்.

"உன் சினேகிதன் என்ன சொல்கிறான்?"

ரஞ்சனி தலை குனிந்தபடி சொன்னாள்.

"அவனுக்கு நான் மேலே படிக்கிறது பிடிக்கலை. வேணாம்னு சொன்னான். இல்லை. என் படிப்பு எனக்கு முக்கியம். என் முன்னேற்றம் எனக்கு முக்கியம்னு சொன்னேன்.."

"விடு சனியனை" என்றாள் சந்தியா.

"எதைவிடவும் சினேகம் முக்கியம். அதைவிடவும் உன்னோட தீர்மானம், உன்னோட முடிவு முக்கியம். வீட்டோட இருந்து சமைச்சுப்போட்டு, பிள்ளை பெற்றுக்கொடுத்து டாட்டா காட்டி புருஷனை வேலைக்கு அனுப்பும் பாவப்பட்ட பெண்ணை அவன் உன்கிட்ட தேடி இருக்கான். இந்த மாதிரி பசங்கள்தான் அதிகம் இருக்கானுங்க இப்ப!"

ரஞ்சனியை நினைக்கப் பெருமையாக இருந்தது. இவள்தான் இன்றைய இளம் தலைமுறையின் சரியான பிரதிநிதி.

"வெளிநாட்டுக்குப் போக வேணாம்னு சொல்றானா, எது அவன் பிரச்னை?"

"வெளிநாட்டுக்குப் போகலாம். ஆனால் கல்யாணம் முடிஞ்சு அல்லது நிச்சயதார்த்தம் முடிஞ்சு போகலாம்னு சொன்னான்."

"பயம். அவன்மேல அவனுக்கே நம்பிக்கை இல்லை."

"கடைசியா, இது வேணாம்னு நான் முடிவெடுத்துட்டேன்."



"சும்மா விட்டிருக்க மாட்டானே.."

"அப்புறம்தான் அவன் பொறுக்கி முகத்தை பார்க்க முடிஞ்சுது. செல்லுக்கெல்லாம் பேசுவான். நான் அவனை ஏமாத்திட்டதா எல்லார்கிட்டயும் சொல்லிக்கிட்டு திரிஞ்சான். நான் போகிற இடத்துக்கெல்லாம் வந்தான். நல்ல வேளை. குரூரமா போயிடலை. ஒரு வழியா ஒதுங்கிட்டான்."

"அப்பா என்ன சொன்னார்?"

"வெளிநாடு வேண்டாம்னார்."

"அம்மா..."

"அம்மாவுக்குன்னு தனிக் கருத்து இருக்கா என்ன."

"எல்லா அப்பா அம்மாக்களும், அவர்களுக்குத் தெரியாமலேயே தம் பெண்ணுக்கு எதிராகவே சிந்திக்கிறாங்க."

"என் அண்ணன் மூர்த்தி மட்டும்தான் நான் செய்யறது எல்லாம் சரின்னு ஆதரிச்சவன்".

மூர்த்தி, பணத்துக்காக அலைந்து கொண்டிருந்தான். அலுவலக உதவி என்று ஒன்றும் இல்லாது, நண்பர்களிடம் அலைந்து கொண்டிருந்தான்.

"இன்னும் எவ்வளவு தேவைப்படும், ரஞ்சனி?"

"கையில் ஒரு லட்சத்துக்கு டாலர் வேணும்". இதைத் தயங்கியபடியே சொன்னாள் ரஞ்சனி.

பார்க்கலாம். மற்ற வேலையைச் செய்து முடியென்று அப்போதைக்கு ஏதோ ஒரு நம்பிக்கையில் சொன்னாள். அடுத்த இரண்டு நாள்கள் இதற்காகவே ஒதுக்கினாள். விடுமுறை போட்டாள். நண்பர்கள் எல்லோரையும் சந்தித்துப் பேசினாள். லோன் போடும் வாய்ப்பு உள்ளவரை அதையும் முயற்சித்தாள். கழுத்தில்

கிடந்த செயினையும், போடாமல் கிடந்த வளையல் இரண்டையும் விற்றாள். எப்படியோ, ஒரு லட்சத்துப் பத்தாயிரம் தேற்றினாள்.

ரஞ்சனியை வரச் சொல்லி பணத்தைக் கொடுத்தாள்.

"இதைத் திருப்பிக்கொடுக்க, சில வருஷங்கள் ஆகுமே"

"நான் கேட்கலையே. அதோடு இதைக் கடன்னும் நான் சொல்லலையே."

"இல்லை, சந்தியா இது பெரிய தொகை."

"எதுவும் பெரிசில்லை. சும்மா இரு."

ஏர்போர்ட்டுக்கு மூர்த்தியும், சந்தியாவும் ரஞ்சனியை வழி அனுப்ப வந்திருந்தார்கள்.

**சர்வரின் சொந்த வாழ்க்கையை கேட்கிறோமா?**

"இது உனக்கு முதல் வெளிநாட்டுப் பயணம் இல்லையா"

"ஆமாம் சந்தியா."

"பதற்றம் இருக்கும். எல்லாம் திரும்பும்போது சரியாயிடும்" மிகவும் நெகிழ்ச்சியுடன் விடை பெற்றாள் ரஞ்சனி.

அடிக்கடி அப்பா அம்மாவைப் போய்ப் பார்த்துவிட்டு வரச் சொன்னாள் மூர்த்தியிடம். ரஞ்சனி, போன மாசம்தான் சிநேகிதி கொடுத்தாள் என்று ஒரு கிளியை வாங்கிக் கொண்டு வந்திருந்தாள். பச்சைக் கிளி. பவழ மூக்குக்காரி. கீக்கி என்று சதா பேசிக் கொண்டிருந்தது. இரவுகளில் தனியாக இல்லை என்ற நிம்மதியை அது தந்து கொண்டிருந்தது. துணை இருக்கிறது என்ற தைரியம்தான் நாய் பூனை வளர்க்கும் காரணமோ என்னவோ?"

"இல்லை. அன்பு செலுத்த ஒரு உயிர் தேவை. உனக்கு கிளி."

"அந்தக் கிளியை என் சிநேகிதி வத்சலாவுக்குக் கொடுத்துடு. அவள் வந்து கேட்பாள்."

"சரி."

சந்தியா கேட்டாள்.

"கூண்டுக் கிளியைப் பார்த்தால் உனக்கு பரிதாபமாக இல்லை?" சற்று நேரம் யோசனை செய்துவிட்டு ரஞ்சனி சொன்னாள்.

"உண்மைதான். அதுக்கு மேலாக, கூண்டுக்கிளி என்னை மூர்த்தியை எல்லோரையும் ஞாபகப்படுத்துகிறது இல்லையா!"

சந்தியா தயக்கத்துடன் 'ஒரு வகையில சரி' என்றாள்.

மேலே விமானம்.

"இப்போ ரஞ்சனி என்ன நினைப்பாள்."

"நாளை மறுநாள் நியூயார்க் எப்படி இருக்கப் போகிறது

என்று ஆர்வத்துடன் யோசித்துக் கொண்டிருப்பாள்."

"நம்மைப்பற்றி யோசிக்க மாட்டாளா?"

"மாட்டாள். எப்போதும் மண்ணில் இருக்கும் வரைதான் நட்பு, சுற்றம் உறவு எல்லாம். மேலே போகப் போக, கருத்தின் வர்ணம் மாறிவிடும். மாறணும். என்னத்துக்கு சதா, இந்த மண், வீடு, வீடு சார்ந்த கவலைகளிலேயே உழலணும்."

"அதுவும் சரிதான்."

"இங்கே பக்கத்திலேதான் என் சிநேகிதி பிலோமினா இருக்கிறாள். அதோ அந்த பிளாட்."

அவள் அழைப்பு மணியை இயக்கினாள். பிலோமினா கதவைத் திறந்தாள் 'என்ன ஆச்சர்யம்' என்றாள்.

சந்தியா விமான நிலையம் வந்த காரணத்தைச் சொன்னாள். இரவு உணவை அங்கேயே முடித்துவிட்டு, பிளாட்டின் மொட்டை மாடிக்கு வந்து அமர்ந்தார்கள்.

மேலே நிமிஷத்துக்கொருதரம் விமானம் பறந்து கொண்டிருந்தது.

"பிலோ.. உன் கணவர் எப்போது வருகிறார்?"

"நாளை அல்லது அடுத்த வாரம்."

"இங்கேயே இருந்துவிடுவார் இல்லையா..."

"இல்லை. எப்படி முடியும்?. வெளிநாட்டில் அவருக்கு ஒரு குடும்பம் இருக்கிறது அல்லவா!"

மூர்த்திக்கு திகைப்பாக இருந்தது.

"இது தெரிந்தா திருமணம் செய்து கொண்டீர்கள்?"

"தெரியாமல் எந்தப் பெண்ணுக்குக் கல்யாணத்துக்கு முன்னால் புருஷனின் லட்சணம் தெரிகிறது?"

மூர்த்தியின் முகம் வருத்தமுற்றதை பிலோமினா கண்டாள்.

லேசான மழைத் தூறல்.

"கீழே போவோமா" என்றாள் பிலோமினா.

"வேணாம். வெயிலில் நனைகிறோம். மழையில் காய்ந்தால் என்ன?"

லேசாகத் தூறி மழைவிட்டது. பிலோமினா சொன்னாள்.

"நீங்கள் ஒன்றும் வருத்தப்பட வேண்டாம். எனக்கே இப்போதெல்லாம் எல்லா வருத்தமும் மறைஞ்சு போச்சு..

"ராத்திரி தூக்கத்துல ஒரே இளிப்பா இளிச்சீங்களே, என்ன விஷயம்?"

"ஹி...ஹி... கனவுல, 'இளியானா' வந்தாங்க!"

**- சீர்காழி வி.ரேவதி**



ஓட்டலுக்குப் போறோம். சர்வர் பரிமாறுகிறார். அந்த சர்வரின் சொந்த வாழ்க்கையைக் கேட்கிறோமா?"

"குடும்ப உறுப்பினரும், சர்வரும் ஒன்றா?"

"பெரிய வித்தியாசம் இல்லை."

ஈர மண்ணிலிருந்து வாசனை புறப்பட்டது. இனிய மணம்.

"நல்ல வேளை. குழந்தை இல்லை." என்றாள் பிலோமினா. ஈரக் காற்று இனிமையாக இருந்தது.

"ஏன் நம் குடும்ப வாழ்க்கை தோல்வியில் முடிகிறது..."

சந்தியா சொன்னாள்.

"கணவர்கள் புத்திசாலியை, நுணுக்க உணர்வுள்ளவர்களை, நல்ல மனம் உள்ளவர்களை மனைவியாக, முக்கியமாக சுயமரியாதை உள்ளவளை மனைவியாக அடைய விரும்புவதில்லை."

பிலோ சொன்னாள்.

"இன்றைய நவீன காலத்திலும்!"

"ஆக, புருஷன் இணையை விரும்புவதில்லை. பின்னால் இருந்து இஸ்திரி போட்ட சட்டையை எடுத்துக் கொடுக்கிற பெண்களையே விரும்புகிறான் என்கிறாய்."

ஈரத்தை முகந்து காற்று இனிமையாக வீசியது.

"இவ்வளவு உணர்ந்த நீ, நானும் மூர்த்தியும் திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்று ஏன் விரும்பினாய்?"

"முட்டாள்தனம்தான், ஒரு வகையில்."

"நான் இப்போது திருப்தியாக இருக்கிறேன். இது போதாதா!" என்றான் மூர்த்தி.

"இதை இப்படி அவசரமாகச் சொல்லி இருக்க வேண்டாமே." என்றாள் சந்தியா.

ஈரமும், ஈரத்தோடு சேர்ந்த காற்றும் மிக இனிமையாக இருந்தது. ●

**(நிறைந்தது)**

